DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.

Case No:**S.C.No.96/2025**

Prosecution Witness P.W.6

Name : **திருமதி.ரபியா பீவி** Caste:

Father's Name :**திரு.** Calling :

Village: Religion :

Taluk : Age:

எதிரிகள் ஆஜர்

**நாள்: 19.01.2026.**

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் போயேன் துறை ரோடு, புதூர், போடி பள்ளிவாசல் அருகில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். எனக்கு இறந்து போன அபிபுல்லாவை தெரியும். அவர் எங்கள் வீட்டிற்கு பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறார். நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள முதல் எதிரி இறந்து போன அபிபுல்லாவின் மனைவி. நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ள 2-ம் எதிரியை எனக்குத் தெரியாது, நான் பார்த்ததில்லை. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை சுமார் 4 வருடங்களுக்கு முன்பு விசாரணை செய்தார்கள். 5-6 மாதங்களாக அபிபுல்லா உடல்நிலை சரியில்லாமல் படுத்த படுக்கையாக சுகம் இல்லாமல் இருந்தார். அவருக்கு மருந்து மாத்திரைகளை 1ம் எதிரி கொடுத்து வந்தார். அபிபுல்லா இறந்த சமயம் நான் ஊரிலேயே இல்லை, மருத்துவமனையில் இருந்தேன். எனக்கு அபிபுல்லா இறந்த செய்தி சொன்னார்கள். அவர் எப்படி இறந்து போனார் என்ற விவரம் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கடந்த 10.11.2019-ம் தேதியன்று காலை 9.00 மணிக்கு அபிபுல்லா இறந்துவிட்டார் என்றும், அபிபுல்லாவின் குழந்தைகள் அழுது கொண்டிருந்தார்கள் என்றும், போடி ஆய்வாளர் இது சம்மந்தமாக விசாரணை செய்தபோது 1-ம் எதிரிக்கு ஏற்பட்ட தகவறான பழக்கம் காரணமாக அபிபுல்லாவிற்கு விஷ மருந்து கொடுத்து கொலை செய்திருப்பதாக 24.02.2025 ஆம் தேதி அன்று காவல் ஆய்வாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.19 15:58:11 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.